

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில், 45 ஆவது நிகழ்ச்சியாக, வழக்கறிஞர்களுக்கு ஒரு இலட்சம் மதிப்பிலான சட்டப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி கீரனூர் உரிமையியல் நீதிமன்றத்தில் கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையில், மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ்ராஜா, கீரனூர் வழக்கறிஞர் சங்க தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.02.2024) சென்னை, பெசன்ட் நகர் அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயிலில் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ள திருப்பணிகளுக்கான பாலாலய நிகழ்வில் கலந்து கொண்டார். உடன் மண்டல இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி, பெருநகர சென்னை மாநகராட்சி உறுப்பினர் திருமதி கயல்விழி ஜெயக்குமார், திருக்கோயில் செயல் அலுவலர் கோ.முரளிதரன் மற்றும் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கழக மூத்த முன்னோடி - இலக்கிய அணி மாநில இணைச் செயலாளர்

# கயல் தினகரன் மறைவு!

## கழக முன்னணியினர் - நிர்வாகிகள் - தோழர்கள் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

**சென்னை, பிப். 16-**

**கழக இலக்கிய அணியின் மாநில இணைச் செயலாளர் கயல் தினகரன் அவர்கள், நேற்று (15.2.2024 - வியாழக்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**



சிறிது காலமாக உடல் நலம் குன்றியிருந்த அவர், சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றியும், வயது முதிர்வினாலும் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 88. அவரது மனைவி திருமதி சாந்தா அவர்கள். ஏற்கெனவே மறைவெய்தி விட்டார்.

கயல் தினகரன் - சாந்தா இணையருக்கு தமிழ்ச்செல்வன், செழியன் எனும் இரு புதல்வர்கள் உள்ளனர்.

அன்னார் மனறவுற்ற செய்தியறிந்து - ஏ.பி.நம்பர் 1307, 33வது தெரு, 4வது செக்டார், கலைஞர் நகர், சென்னை - 78. (ஸ்ரீ கிருஷ்ணசாமி மெட்ரிகுலேசன் மேனிலைப் பள்ளி பின்புறம்) உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு ஏராளமான கழக நிர்வாகிகளும், முன்னணியினரும், தோழர்களும், எழுத்து - இலக்கிய உலகினரும், பல்துறைப் பெருமக்களும் மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஏற்றுக்கொண்ட கொள்கையிலிருந்து எந்நாளும் வழுவிடாத தூய கழக முன்னோடியாக விளங்கிய கயல் தினகரன் அவர்களின் மறைவு, கழகத்திற்குஇழப்பு எனின் அது மிகையல்ல.

இளமைக் காலம் தொட்டே திராவிட இயக்கத்தின் மீதும் பகுத்தறிவு கொள்கைகள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தன்னை திராவிட இயக்கச் செயல்பாடுகளில் பங்கெடுத்துக்கொண்டார்.

சற்றொப்ப எழுபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இயக்கம் (தி.மு.க.) ஒரே தலைமை (கலைஞர்) என வாழ்ந்தவர். கலைஞரின் தீவிர பற்றாளர். அன்னாருடைய உடல் இன்று (16.2.2024-வெள்ளிக் கிழமை) காலை 10 மணியளவில் இறுதி மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

அவரது வாழ்க்கை வரலாறு வருமாறு:-

கயல் தினகரன் (கலைஞர் விருது) இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை நகரத்தில் 1936ஆம் ஆண்டு பிறந்தார். தமது 31ஆம் அகவையில் தலைவர் கலைஞர் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.

1952ஆம் ஆண்டில் எழுதும் வேட்கையின் விளைவாக 'சூரியகாந்தி' எனும் கையெழுத்து இதழினைத் தொடங்கினார்.

பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நாடகத்தின்மீது ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக 'மறுமணம்' எனும் நாடகம் எழுதி அரங்கேற்றினார். அந்த சீர்திருத்த நாடகத்தில் பெண் வேடம் பூண்டு நடிக்கவும் செய்தார்.

இவர் 'கிளர்ச்சி, 'சங்கப் பலகை', 'மனிதன்', 'கலைமன்றம்', 'காதல்', 'சுதந்திரன்' ஆகிய வார இதழ்களிலும் 'தமிழ்நாடு' நாளிதழி லும் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வந்தார். 'வணங்காமுடி', 'செட்டிநாடு' ஆகிய வார இதழ்களின் துணை ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

இவர் 1957ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் 'தென்றல்', 'முல்லை', கண்ணப்பா வள்ளியப்பனின் "இனமுழக்கம்" ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தார். சிறுகதை மன்னன் எஸ்.எஸ். தென்னரசு இவரை ஊக்கப்படுத்தி, இவரது படைப்புகளுக்கு மெருகேற்றச் செய்தார்.

1962, 63ஆம் ஆண்டுகளில் குன்றக்குடி அடிகளார் தொடங்கிய 'தமிழ்' மற்றும் 'அறுவடை' ஆகிய திங்கள் இதழ்களிலும் துணை ஆசிரியர் பொறுப்பேற்று இதழ்கள் வெளிவர துணை நின்றார்.

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருக்கு வரவேற்பளிக்க நடைபெற்ற சென்னை கடற்கரைக் கூட்டத்தில் தினகரன் அவர்கள் தனது சொந்த முயற்சியில் தொடங்கிய 'தென்னகத் தலைவன்' எனும் கிழமை ஏட்டினை அறிஞர் அண்ணா வெளியிட்டார். அவ்விழாவில் கலைஞர் அவர்களுக்கு கணையாழி அணிவித்து மகிழ்ந்தார்.

இவர் 1964ஆம் ஆண்டு முதல் பத்தாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலி மற்றும் முத்தாரம், மறவன் மடல் ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக பணியாற்றினார். முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் தானும் ஒருவர் என்பதை எண்ணிப் பெருமைப்படுபவர்.

இவரது எழுத்துப்பணி முரசொலி ஏட்டில் தொடர்கிறது என்பதோடு, 'அக்குடும்பத்தில் ஒருவனாகவே கலந்துள்ளேன்" என்று பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

இவர் 1974ஆம் ஆண்டில் செ. மாதவன் அவர்கள் தொடங்கிய 'தமிழ் முரசு' நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்று தரமாக நடத்திக் காட்டினார்.

இவர் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் மெயில் ஆங்கில ஏட்டின் ஆசிரியர் இராசன் அவர்களோடு மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்.

1967ஆம் ஆண்டு அண்ணா முதல்வராக இருந்தபோது அண்ணாவுடன் ஒரு வாரம் என்ற தலைப்பில் சேகரித்த செய்தியை இவர் எழுதி முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்தது. இது வரலாற்று முக்கியம் வாய்ந்தது ஆகும். மேலும் முதல்வர் அண்ணாவின் சிறப்புக் குறித்து இவர் எழுதிய 'மகுடமெடுத்து தமிழன்னை சூட்டினாள்' எனும் பாடல் இசைத்தட்டாக வெளிவந்து நன்கு விற்பனை ஆனது. அறிஞர் அண்ணாவின் மனந்திறந்த பாராட்டைப் பெற்றார்.

1985ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் சங்க மாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுரை ஆற்றினார். தற்போது இவர் மாநில தி.மு.க. இலக்கிய அணியின் இணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றி வந்தார்.

கழகத் தொண்டராகிய கயல் தினகரன் அவர்களுடைய இலட்சியப் பிடிப்பையும்,பத்திரிகையாளர் பணியையும் பாராட்டுகின்ற வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் 15.9.2001 அன்று சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



செய்தித்தாள் விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.கருணாநிதி சாந்தி தம்பதியினரின் மகள் கே.வித்யா – கே.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் திருமண வரவேற்பு விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை – உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு
### பிப்ரவரி 16 (1978)



**கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.**

**1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.**

**சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.**

**1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு "சிந்தனைசிற்பி சிற்றரசு" பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருப்பெரும்புதூரில் இன்று மாலை நடைபெறுகிறது

# 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' மாபெரும் தேர்தல் பரப்புரை பொதுக் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை - அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் - பி.கே.சேகர் பாபு சிறப்புரை!

திருப்பெரும்புதூர், பிப். 16-

வருகிற நாடாளுமன்ற தேர்தலையொட்டி, திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் திருப்பெரும்புதூரில் இன்று 16.2.2024 அமைச்சர் தா.மோ. அன்பரசரன் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் - கடந்த 10 ஆண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து, தற்போது நாடகமாடும் அடிமை அதிமுகவின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில்,

முதற்கட்டமாக "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் நாடாளுமன்ற தொகுதி வாரியாக தேர்தல் பரப்புரை கூட்டங்களை நடத்திட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதன்படி, திருப்பெ ரும்புதூர் நடாளுமன்றத் தொகுதி சார்பாக, "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் இன்று 16-ஆம் தேதி வெள்ளிக்கிழமை, மாலை 6.00 மணியளவில் திருப்பெரும்புதூர் பேருந்து நிலையம் அருகில், மாபெரும் தேர்தல் பரப்புரை கூட்டம் நடைபெறுகிறது.

காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார். திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ந.கோபால் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, காரப்பாக்கம் க.கணபதி, ஜோசப் சாமுவேல், காஞ்சி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய செயலாளர்-ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் - சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு, கழகப் பொருளாளர்-கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர்கள் பிடிசி ஜி.செல்வராஜ், பெ.சேகர், இரா.நரேந்திரன், வெ.உமாகாந்த், எஸ்.ஏ.ரமேஷ், எஸ்.பி.எம்.ஷேக் அப்துல்லா,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமாறன், பி.கே.மூர்த்தி, தொ.மு.ச.செயலாளர் இரா. பொன்னுராம், கழக தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர்கள் அ.தமிழ்மாறன், என்.நவீன், கழக சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

பகுதி செயலாளர்கள்- என். சந்திரன், ப. குணாளன், எஸ். சேகர், வே. கருணாநிதி, த. ஜெயக்குமார், இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ். இந்திரன், டி. காமராஜ் ஆ. நடராஜசுன், ஏ.கே. கருணாகரன், இ. எஸ். பெர்னாட், ஆர். சுரேஷ் நொளம்பூர், வே. ராஜன், டி. எஸ்பி ராஜ கோபால், எம்.டி ஆர் நாகராஜ்

ஒன்றிய செயலாளர்கள் - துரை. வீரமணி, ஏ. வந்தேமாதரம், ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி, நகர செயலாளர்கள், டி பாபு, எஸ் ஜபருல்லா, கோ. சத்தியமூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள்- எம்.எஸ்.கே. இப்ராகிம், ஆர்.டி பூபாலன், கீதாஆனந்தன், எம். ஆர். சீனிவாசன், ஆர்.எனுஹஸ். சங்கர், க. தேவேந்திரன், எஸ். சதீஷ், கே. எத்திராஜ், மா.கணேஷ்பாபு, இரா. பாஸ்கரன், மு.ரஞ்சன், இராமபுரம் செல்வகுமார், வீர கனிமொழி, வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி. பூர்ணிமா,

நகராட்சி - பேரூராட்சி - ஊராட்சி ஒன்றியகுழு தலைவர்கள் மற்றம் துணைத் தலைவர்கள்-சரஸ்வதி மனோகரன், சாந்தி சதீஷ்குமார், உமாமகேஸ்வர வந்தேமாதரம், பி.பிரசாத் மாலதி போஸ்கோ, தே. திருநாவுக்கரசு, இந்திராணி சுப்பிரமணியன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

முடிவில், காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, திருப்பெரும்புதூர் பேரூர் செயலாளர் ஆர்.சதீஷ்குமார் ஆகியோர் நன்றியுரை கூறுகின்றனர்.

முன்னதாக தொடக்கத்தில் மாலை 4.30 மணியளவில் புதுகை பூபாலன் குழுவினரின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

### எழும்பூர் தொகுதியில் தடம் எண்.34, 7இ, 35

# பேருந்து சேவைகளை கூடுதலாக இயக்கிடுக!

## சட்டப்பேரவையில் இ.பரந்தாமன் கோரிக்கை!

சென்னை, பிப்.16-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இ.பரந்தாமன், தடம் எண்.34, 7இ, 35 பேருந்துகளை கூடுதலாக இயக்கிடவும் 4டி பேருந்தை மீண்டும் பழைய வழித்தடத்தில் இயக்கிடவும் கோரிக்கை விடுத்தார்.



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இ. பரந்தாமன்:** வண்டி தடம் எண் 34 திருவொற்றியூர்அம்பத்தூர், தடம் எண் 7E, Broadway to Ambattur, தடம் எண் 35 Broadway to Iyanavaram ஆகிய பேருந்துகளனைத்தும் எழும்பூர் தொகுதி சூளை வழியாகச் செல்கின்றன. இவற்றுக்கு கூடுதல் சேவை தேவைப்படுகின்றன என்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. எனவே, இந்த வழித்தடங்களில் செல்லும் பேருந்துகளுக்கான கூடுதல் சேவை இயக்கப்படுமா?

மேலும், 4D என்கின்ற வழித்தடம் வள்ளலார் நகர் காயிதேமில்லத் முன்பு Elephant Gate வழியாக சென்றுகொண்டிருந்தது. தற்போது bridge கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், பழைய நடராஜா திரையரங்கம் வழியாக திருப்பி இயக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த இயக்க சேவையும் கடந்த 4 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இனி அந்த 4D பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் இது குறித்து ஏற்கெனவே எழுத்துபூர்வமாக என்னிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாநகர போக்குவரத்து அலுவலர்களைக் கொண்டு ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். அங்கு கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற பாலப்பணி, இரண்டு மாத காலத்தில் முடிவடையவிருக்கிறது. அப்பணி முடிவடைந்தபிறகு, இந்தப் பரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படும். அவர் என்னிடத்தில் அளித்த கடிதத்தினை Twitterலும் போட்டிருக்கிறார்கள். அவரது தொகுதி மக்கள் பார்த்திருக்கிறார்கள். பணிகள் நிறைவடையும்போது அவரது தொகுதி மக்கள் நிச்சயமாக அவரை வாழ்த்துவார்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# நீலகிரி மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!



உதகை, பிப்.16-

நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டம் இன்று 16.2.2024 வெள்ளிக்கிழமை பகல் 12 மணி அளவில் மாவட்டக் கழக அவைதலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத் துறை அமைச்சருமான கா. ராமசந்திரன் முன்னிலை யில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு- பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

1. மார்ச் 1 கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா தொடர் நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் சிறப்புடன் நடத்துவது குறித்து.

2. கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் அறிவிப்பின் படி, 2024 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு 18.2.2024ல் நாடாளுமன்ற தொகுதியில் நடைபெறும் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" மாபெரும் பொதுக்கூட்டம் நிகழ்ச்சி குறித்து.

3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் மாநிலத் துணைச் செயலாளர் .ஜோசப்ராஜ் தலைமையில். திருநெல்வேலி மத்திய மாவட்ட அமைப்பாளர் நௌசாத் முன்னிலையில் திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் எஸ். திருப்பதி ஜெயசீலன் , நவாஸ்கனி, தென்காசி இன்ஜி.பி.முகமது இஸ்மாயில், ஜி. எம்.எஸ். ஷபீக் மற்றும் அனைத்து மாவட்ட தலைவர், துணைத் தலைவர் மற்றும் மாவட்ட , மாநகர, துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர். மேலும் வரும் 22.02.2024 அன்று திருநெல்வேலியில் நடைபெறவுள்ள மண்டல கருத்தரங்கம் தொடர்பான பல்வேறு பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகிகள் தங்களது ஆலோசனைகளை வழங்கினார்கள்.